**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

O.S.No.35/2024

வாதி தரப்பு சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 15.06.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**வா.சா.1– ராஜ்கவுண்டர் த/பெ குப்புசாமி**

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. 1ம்பிரதிவாதி செல்லம்மாள் 2ம் பிரதிவாதி சசிக்குமார் இருவரும் நான் தாக்கல் செய்துள்ள ExA13 Suit Register ஆவணத்தின் தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். OS 44/1994 என்ற வழக்கில் A அட்டவணைச்சொத்து தள்ளுபடியாகிவிட்டது என்றால் சரிதான் அதில் மேல்முறையீடு செய்து அது எனக்கு சாதகமாகிவிட்டது. ExA13 Suit Register சர்வே எண். 222/18 குறிப்பிடப்படவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளது. ஆவணத்தில் குறிப்பிடவில்லை வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சர்வே எண். 222/18 ல் எனது பெயரில் பட்டா உள்ளதா என்றால் இருக்கிறது.

2. நான் தாக்கல் செய்துள்ள ExA14 கிரையப்பத்திரம் பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு கிருஷ்ணன் எழுதிக்கொடுத்த பத்திரம் என்றால் சரிதான். அந்த கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் 1ம்பிரதிவாதி செல்லம்மாள் 2ம் பிரதிவாதி சசிக்குமார் இருவரும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். ExA14 கிரையப்பத்திரத்தை பொறுத்து எனக்கு உரிமையுண்டா என்றால் உரிமையுண்டு பாதையை பொறுத்து உரிமையுண்டு. நான் தாக்கல் செய்துள்ள 3 ஆவணங்களும் வழக்கிற்கு தேவையில்லாததாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு வலு சேர்க்காது என்றால் சரியல்ல. எனது வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.17 10:15:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.